முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1398

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.07.2023**, வெள்ளிக்கிழமை

1. அறம்காத்து வருகின்ற தர்மனே
அகிலத்தை காக்கவந்த தேசிகனே
வரம்பெற்று என் சக்தியாக
வாழுகின்ற வள்ளலே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 12 ம் நாள், 28.07.2023, வெள்ளிக்கிழமை)
வரமாக அரங்கன் நீ கலியுகத்தில்
அறம்போற்றும் ஞானப்படைகளை ஆற்றல்பட உலகமெல்லாம் நிரப்பி
3. நிரப்பியே ஞான ஆட்சிக்காலத்தை
நிலவுலகம் அடையும் விதமாக
மாற்றத்தை நடத்தி வருகின்ற அரங்கனே
மண்ணுலகில் உன் தர்மம் உலகை ஆளும்
4. ஆளுமப்பா உன் தொண்டர் படை
அகிலத்தை மாற்றும் மகா சக்தியாக
நாளும் நாளும் பெருகி இனிதே
நாட்டிடுவேன் உலகமெல்லாம் உன் சக்தியாக
5. ஆகவே அற்புதம் கூடி
அகிலத்தில் அரங்கன் மகிமையாக
அகிலமெல்லாம் வரமாக மாற்றம் இனிதே கண்டு
வையகம் ஞானவான்கள் நிறைந்த பூமியாக
6. ஆகவே மாற்றம் கண்டு இனிதே அரங்கன் நீ போற்றுகின்ற ஞான ஆட்சி
வரமாக மக்களிடை நிரம்பி இனிதே
வையகம் ஞானத்தலைமையும் ஞானிகள் பலமும் கூடி
வடிவேலன் என் ஆசிபட உயர்வான பூமியாக மாற்றம் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—